# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

<u>ஆணை நாள் 14.07.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2143/B/2025</u>**

திரு.K.முருகன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / — பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அகஸ்தீஸ்வரம் வட்டம்,
(இ) நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629701.

**<u>கோரிய தகவல்:</u>** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 26.07.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் கடித எண். ந.க.எண்.C3/13163/2017 நாள்.02.01.2018, இந்து காட்டுநாயக்கன் ஜாதிசான்றிதழ் வழங்கப்பட்ட பதிவேடுகள்/கோப்புகள் குறித்த தகவல்கள் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 3 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 24.01.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (14.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.K.முருகன் அவர்கள் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஜெமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் ஆஜரானார். |

**ஆணை**

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 27.08.2024, 23.10.2024 தேதியிட்டு தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், தற்போது மீண்டும் 10.07.2026 தேதியிட்டு தகவல்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், தனது சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தான் கோரிய தகவல்கள் தொடர்பான கோப்பு பதிவறையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கப்பெறவில்லை என்றும் தனக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, தான் கோரிய தகவல்களை பெற்றுத்தருமாறு அல்லது தனக்கு 1987-இல் வழங்கப்பட்ட தனது அசல் சாதி சான்றிதழ் தன்னிடம் உள்ள நிலையில் அதன் உண்மைத் தன்மையை தனக்கு வழங்க ஆணையிடுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் இந்து காட்டு நாயக்கன் சான்றிதழ் அடிப்படையில் வேலை பெற்றுள்ளார் என்றும், அவரது சான்றிதழின் உண்மைத்தன்மையை அறிய அவரது சான்றிதழ் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், உண்மைத்தன்மை அற்றது என வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது என்றும், அதன் பின்பு மாவட்ட அளவிலாக ஆய்வுக் குழுவாலும், மாநில அளவிலாக ஆய்வுக்குழுவாலும் அவரது சான்றிதழ் உண்மைத்தன்மை அற்றது என்று ஆணையிடப்பட்டது என்றும், அதன் மீது மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, மேற்கூறிய மாநில அளவிலான ஆய்வுக் குழுவின் ஆணை செல்லாது என்று உயர்நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டது என்றும், மேல்முறையீட்டாளர் தற்போது கோருகிறவாறு அவருக்கு 1987-இல் வழங்கப்பட்ட சாதி சான்றிதழின் உண்மைத்தன்மையை தங்களால் வழங்க இயலாது என்றும், அவர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் கடித எண். ந.க.எண். C3/13163/2017 நாள்.02.01.2018-னை பதிவறையில் தேடிப்பார்த்து அதற்கான அறிக்கையினை மேல்முறையீட்டாளருக்கும் ஆணையத்திற்கும் சமர்ப்பிப்பதாக உறுதியளித்து, அறிக்கையை சமர்ப்பிக்க தனக்கு கால அவகாசம் வழங்கும்படி கேட்டுக்கொண்டார். இவற்றை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***மேற்படி பொதுத் தகவல் அலுவலர் உறுதியளித்தன்படி, மேல்முறையீட்டாளர் 26.07.2024 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் தகவல்களை தேடிப்பார்த்து, மேல்முறையீட்டாளர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி, சான்றொப்பமிட்டு, விரைவு அஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு வழங்கி அதன் நகலையும், மேல்முறையீட்டாளர் தகவல்களை பெற்றுக்கொண்டதற்கான விரைவு அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு 31.07.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
2. ***மேற்படி மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் தகவல்கள் மீண்டும் பதிவறையில் கிடைக்கப்பெறவில்லை எனும்பட்சத்தில் ஒரு ஆணை உறுதி பிரமாண பத்திரத்தையும் (Sworn Affidavit) தயார் செய்து, அதனை மேல்முறையீட்டாளருக்கு விரைவு அஞ்சலில் அனுப்பி, அதனை மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை நகலினையும், மேற்படியான ஆணை உறுதி பிரமாண பத்திரத்தின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து இவ்வாணையத்திற்கு இவ்வாணையத்திற்கு***

*31.07.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஓம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2143/B/2025**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:**
பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அகஸ்தீஸ்வரம் வட்டம்,
(இ) நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629701.

**மேல்முறையீட்டாளர்:**
திரு.K.முருகன்,
9/72, K.K. பவன்,
காட்டுநாயக்கன் தெரு,
சுப்பிரமணியபுரம், தேரூர் & அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629704.

Copy to : File
AK/PC